# மாலைக்கதிர்

Maalaikkathir

சாயல் - 03 வள்ளுவர் ஆண்டு 2055 ஆவணி 02 திங்கட்கிழமை 18.08.2025 கதிர் 289












## முல்லைத்தீவு முற்றாக முடக்கம்



முல்லைத்தீவு, ஓக. 18

வர்த்தக நிலையங்கள் மூடப்பட்டதுடன், தனியார் பொதுப்போக்குவரத்தும் முடங்கியது அளவுக்கு அதிகமான இராணுவப் பிரசன்னத்துக்கு எதிராகவும், முல்லைத்தீவு - முத்துஐயன்கட்டு பிரதேசத்தில் இராணுவத்தால் இளைஞர் ஒருவர்

7

# ஹர்த்தால் வெற்றி

## யாழ். தவிர ஏனைய இடங்களில் என்று கூறுகின்றது தமிழரசுக் கட்சி



யாழ்ப்பாணம், ஓக. 18

**யாழ்ப்பாணம் தவிர ஏனைய இடங்களில் ஹர்த்தால் வெற்றியளித்துள்ளது என்று இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் சி.வி.கே. சிவஞானம், பொதுச்செயலாளர் எம்.ஏ.சுமந்திரன் ஆகியோர் கூட்டாகத் தெரிவித்தனர்.**

**யாழ்ப்பாணத்தில் இன்று பிற்பகல் நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர்கள் மேற்கண்டவாறு கூறினர்.**

இந்த ஊடக சந்திப்பில் அவர்கள் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

"வடக்கு, கிழக்கில் உள்ள இராணுவத்தினரை அகற்றுமாறு கோரிக்கை முன்வைத்து ஹர்த்தாலுக்குத் தமிழரசுக் கட்சி அழைப்பு விடுத்தது.

அதனை ஏற்று வடக்கு, கிழக்கில் பெரும்பாலான இடங்களில் ஹர்த்தலுக்கு ஆதரவு கிடைத்திருந்தது.

யாழ்ப்பாணத்தில் குறிப்பாக யாழ். நகர் பகுதியில் மாத்திரமே வர்த்தக நிலையங்கள் திறந்திருந்தன. அவர்கள் ஆதரவு வழங்காதமை எமக்கு மன வருத்தம்.

எமது ஹர்த்தால் அறிவிப்பு வந்தவுடனேயே ஜனாதிபதி, அமைச்சர்

7

# மட்டு., அம்பாறையில் ஹர்த்தாலுக்கு ஆதரவு

## தமிழ், முஸ்லிம் கடைகள் மூடல்




மட்டக்களப்பு, ஓக. 8

தொடர்ச்சியாக நிலவும் அதிகளவு இராணுவப் பிரசன்னத்துக்கும், அதனால் ஏற்படும் பாதிப்புக்களுக்கும் எதிர்ப்புத் தெரிவித்து வடக்கு, கிழக்கில் இன்று ஹர்த்தால் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. இதனால் மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் மக்களின் இயல்பு நிலை பாதிக்கப்பட்டது.

மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் தமிழ், முஸ்லிம்கள் தங்கள் வர்த்தக நிலையங்களை மூடி ஹர்த்தாலுக்கு ஆதரவு தெரிவித்தனர்.

## திருமலையில் சில கடைகள் திறப்பு



திருகோணமலை, ஓக. 18

வடக்கு, கிழக்கில் அளவுக்கு அதிகமான இராணுவப் பிரசன்னத்துக்கு எதிராகவும், முல்லைத்தீவில் இராணுவத்தால் இளைஞர் ஒருவர் உயிரிழந்தமையைக் கண்டித்தும்

7

## வவுனியாவில் பல கடைகள் பூட்டு

வவுனியா, ஓக. 18

அளவுக்கு அதிகமான இராணுவப் பிரசன்னத்துக்கு எதிராக வடக்கு, கிழக்கு தழுவிய ரீதியில் இன்று ஹர்த்தால் போராட்டத்துக்கு அழைப்பு

7





# யாழ்ப்பாணத்தில் ஹர்த்தால் பிசுபிசுப்பு







யாழ்ப்பாணம், ஓக. 18

வடக்கு, கிழக்கில் இருந்து இராணுவத்தை வெளியேற்றக் கோரி இலங்கைத் தமிழரசுக் கட்சியால் பூரண ஹர்த்தால் போராட்டத்துக்கு அழைப்பு விடுக்கப்பட்ட நிலையில், யாழ்ப்பாணம் மாவட்டத்தில் சில இடங்களில் ஹர்த்தால

7

## ஹர்த்தலால் முடங்கியது கிளிநொச்சி





கிளிநொச்சி, ஓக. 18

வடக்கு, கிழக்கில் இருந்து இராணுவத்தை வெளியேற்றக்

7

## பெருமளவு கடைகள் மன்னாரில் பூட்டு!

மன்னார், ஓக. 18

வடக்கு, கிழக்கில் அதிகரித்த இராணுவப் பிரசன்னத்துக்கு எதிரான இன்றைய

7




- பக்கம் சாராச் செய்திகளுடன் மக்களுக்கான மாலை இதழ் -

# தொடரும் தபால் தொழிற்சங்கத்தின் பணிப்புறக்கணிப்பு

கொழும்பு, ஓக 18

தபால் மற்றும் தொலைத்தொடர்பு அதிகாரிகள் சங்கம் மற்றும் ஒன்றிணைந்த தபால் தொழிற்சங்க முன்னணியால் ஆரம்பிக்கப்பட்ட பணிப்புறக்கணிப்பு போராட்டம் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டுள்ளது.

19 கோரிக்கைகளை முன்வைத்து நேற்று (17) மாலை 4.00 மணி முதல் இந்த பணிப்புறக்கணிப்பு போராட்டத்தை அவர்கள் தொடங்கினர். மத்திய தபால் பரிமாற்றத்தில் தொடங்கிய இந்த பணிப்புறக்கணிப்பு போராட்டம் நேற்று நள்ளிரவு 12.00 மணி முதல் நாடு தழுவிய அளவில் அமுல்ப்படுத்தப்பட்டுள்ளதாக தபால் தொழிற்சங்க முன்னணி தெரிவித்துள்ளது.

இதன் விளைவாக, இன்று அனைத்து தபால் செயல்பாடுகளும் பாதிக்கப்படும் என்று ஒன்றிணைந்த அஞ்சல் தொழிற்சங்க முன்னணியின் இணை அழைப்பாளர் சிந்தக பண்டார தெரிவித்தார்.

இருப்பினும், குறித்த பணிப்புறக்கணிப்பு தொடர்பில் கொழும்பில் நடைபெற்ற ஊடக சந்திப்பில், கருத்து தெரிவித்த தபால்மா அதிபர் ருவன் சத்குமார, தபால் ஊழியர்களின் பல கோரிக்கைகள் நிறைவேற்றப்பட்ட நிலையில், இதுபோன்ற பணிப்புறக்கணிப்பில் ஈடுபடுவது நியாயமற்றது என்று கூறினார்.

“3,000 உப தபால் நிலையங்கள் உள்ளன. அவை வேலைநிறுத்தத்தில் இல்லை.

இருப்பினும், தபால் பொருட்களை வழங்குவதில் சிறிது தாமதம் ஏற்படலாம். தபால்மா அதிபர் என்ற முறையில், ஏற்பட்ட சிரமத்திற்கு இந்த நேரத்தில் நான் வருத்தம் தெரிவித்துக் கொள்கிறேன். பணிக்கு வரத் தயாராக உள்ளவர்கள் உள்ளனர்.

இருப்பினும், அச்சுறுத்தல்கள் உள்ளன. அலுவலகத்திற்கு வருபவர்களுக்கு பாதுகாப்பு வழங்குமாறு பொலிஸ்மா அதிபருக்கு நான் கடிதம் எழுதியுள்ளேன். இதுபோன்ற நாசவேலை செயல்கள் நடந்தால், நிச்சயமாக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும்.

IT தளங்கள் சீர்குலைந்துள்ளன. அவற்றை அரசாங்க சொத்துக்களுக்கு சேதம் விளைவிப்பதாக நாங்கள் பார்க்கிறோம்.

அப்படி நடந்தால், ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும்.” என்றார். (ஐ)

# மின்சார சபையின் இலாபம் அதிகரிப்பு!

கொழும்பு, ஓக 18

2025 ஆண்டு ஜூன் மாதம் 30 ஆம் திகதியுடன் உடன் முடிவடைந்த நிதியாண்டின் காலாண்டில் இலங்கை மின்சார சபையால் 5.31 பில்லியன் ரூபாய் இலாபத்தை பதிவு செய்ய முடிந்துள்ளது.

முந்தைய காலாண்டில், அதாவது 2025 மார்ச் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த நிதியாண்டின் காலாண்டில், 18.47 பில்லியன் ரூபாய் நட்டம் ஏற்பட்டிருந்த நிலையில், இந்த காலாண்டில் இவ்வாறு அந்த சபை இலாபம் ஈட்டியுள்ளமை விசேட அம்சமாகும்.

2025 ஜூன் மாதம் மேற்கொள்ளப்பட்ட மின்சார கட்டண திருத்தத்தின் மூலம் மின்சார சபை இலாபகரமான பாதையில் நுழைய முடிந்ததுள்ளதாக ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இருப்பினும், 2024 ஜூன் காலாண்டில் சபையால் ஈட்டப்பட்ட 34.53 பில்லியன் ரூபாய் லாபத்துடன் ஒப்பிடும்போது, ஜூன் 2025 காலாண்டில் ஈட்டப்பட்ட இலாபம் 85மூ குறைவைக் காட்டுகிறது.

தற்போதைய அரசாங்கம் ஆட்சிக்கு வந்த பிறகு, 2025 ஜனவரி மாதத்தில் மின்சார கட்டணம் சுமார் 20மூ குறைக்கப்பட்ட நிலையில், இது 2025 மார்ச் காலாண்டில் அறிவிக்கப்பட்ட இழப்புக்கு பெரும்பாலும் காரணமாகும்.

இது தொடர்பாக, சர்வதேச நாணய நிதியம், சர்வதேச நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதி வசதி (நுகுகு) திட்டத்தின் அடுத்த தவணையைப் பெறுவதற்கு, இலங்கை செலவு ஈடுகட்டும் மின்சார விலையை மீட்டெடுக்க வேண்டும் என்று கூறியது.

அதன்படி, 2025 ஜூன் இல் மின்சார கட்டணம் மீண்டும் திருத்தப்பட்டது. (ஐ)

# அடுத்த வருடம் மாகாண சபை தேர்தலை நடத்த திட்டம்

கொழும்பு, ஓக 18

மாகாண சபைத் தேர்தல் நடத்தப்பட்ட பின்னர் அரசியலமைப்புத் திருத்தம் மேற்கொள்ளப்படும் என்று அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

தற்போதுள்ள சட்டச் சிக்கல்கள் தீர்க்கப்பட்ட பின்னர், அடுத்த ஆண்டு முதல் 6 மாதங்களுக்குள் மாகாண சபைத் தேர்தலை நடத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் கூறினார்.

கிளிநொச்சி பகுதியில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அமைச்சர் பிமல் ரத்நாயக்க இவ்வாறு தெரிவித்தார்.

“நாங்கள் 2025 இல் தேர்தலை நடத்தினோம். 2024 நவம்பரிலும் தேர்தலையும் நடத்தினோம்.

அடுத்த ஆண்டு முதல் 6 மாதங்களில் மாகாண சபைத் தேர்தலை நடத்துவோம் என்று நம்புகிறோம்.

சட்டத் தடைகள் உள்ளன. அவற்றை அகற்ற முயற்சிக்கிறோம்.

அரசியலமைப்பைக் கொண்டுவருவது குறித்து எங்களிடம் கொள்கை முடிவு உள்ளது.

அரசியலமைப்பைக் கொண்டுவருவது ஒரு விரிவான செயல்முறை.

அதற்கு முன்னர் மாகாண சபைத் தேர்தலை நடத்துவதே எங்கள் இலக்கு.

மாகாண சபைத் தேர்தலை நடத்திய பிறகு அரசியலமைப்பு சீர்திருத்தங்கள் குறித்த விரிவான அரசியல் திட்டத்தைத் தொடங்குவோம்.” என்றார். (ஐ)



# முத்தையன்கட்டு குடும்பஸ்தரின் மரணத்திற்கு நடுநிலையான விசாரணை மேற்கொள்க

முத்தையன்கட்டு பகுதி குடும்பஸ்தரின் மரணம் குறித்து அரசாங்கம் நடுநிலையான விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும் என ஐக்கிய மக்கள் சக்தியின் கம்பஹா மாவட்ட வைத்தியர் காவிந்த ஜயவர்தன தெரிவித்தார். ஊடகங்களுக்குஅவர் மேலும் தெரிவித்ததாவது,

உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதல் சம்பவத்தின் உண்மையை வெளிப்படுத்துவதாக ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க கத்தோலிக்க சபைக்கும், நாட்டு மக்களுக்கும் தொடர்ச்சியாக வாக்குறுதி வழங்கியுள்ளார். குண்டுத்தாக்குதல் விவகாரம் தொடர்பில் அரசாங்கம் முன்னெடுத்த விசாரணைகளை அரசாங்கம் விசாரணை செய்ய வேண்டிய நிலை காணப்படுவதாக ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாறான பின்னணியில் தான் பாதுகாப்பு பிரதி அமைச்சர் அருண ஜயசேகரவுக்கு எதிராக நம்பிக்கையில்லா பிரேரணையை கொண்டு வந்துள்ளோம்.



பிரதி பாதுகாப்பு அமைச்சரின் விடயதானங்கள் வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்படாத காரணத்தால் அவருக்கு எதிராக நம்பிக்கையில்லா பிரேரணையை கொண்டு வர முடியாது என என்று ஆளும் தரப்பினர் குறிப்பிடுகின்றனர்

ஜனாதிபதி வெளிநாடுகளுக்கு பயணம் செய்யும் போது பாதுகாப்பு பதில் அமைச்சராக அருண ஜயசேகர பதவி வகித்துள்ளார்.

ஆகவே இவவிடயத்தில் அவரது விடயதானம் வர்த்தமானியில் பிரசுரிக்கப்படவில்லை என்று ஆளும் தரப்பினரால் குறிப்பிட முடியாது.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் இன்றைய தினம் பூரண ஹர்த்தாலுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. முத்தையன்கட்டு பகுதியை சேர்ந்த குடும்பஸ்தரின் மரணத்தை அடியொற்றியதாக இந்த ஹர்த்தாலுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இந்த குடும்பஸ்தரின் மரணம் தொடர்பில் அரசாங்கம் நடுநிலையான முறையில் விசாரணை செய்து உண்மையை பகிரங்கப்படுத்த வேண்டும்.

யுத்தம் முடிவடைந்த பின்னரும் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் அதிபாதுகாப்பு வலயமாக இராணுவத்தால் அடையாளப்படுத்தப்படுவது நாட்டின் நல்லிணக்கத்துக்கும், சகவாழ்வுக்கும் பாதிப்பை ஏற்படுத்தும் என்றார். (ஐ)

# பொதுப் பாதுகாப்பு பிரதி அமைச்சருக்கு எதிராக சிஐடியில் முறைப்பாடு



கொழும்பு, ஓக 18

பொதுப் பாதுகாப்பு பிரதி அமைச்சர் சுனில் வட்டகலவிற்கு எதிராக குற்றப் புலனாய்வு திணைக்களத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

குடிவரவு குடியகல்வு திணைக்களத்தினைச் சேர்ந்த அதிகாரியொருவரினால் இவ்வாறு முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் பிரதி அமைச்சர் சுனில் வட்டகல ஊடகமொன்றில் வெளியிட்ட கருத்து தொடர்பில் அவர் இந்த குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார்.

கடவுச்சீட்டு மோசடிகள் இடம்பெற்றுள்ளதாக பிரதி அமைச்சர் குற்றம் சுமத்தியதாகவும் அந்தக் குற்றச் செயலில் நிசாந்த என்பவர் ஈடுபட்டதாக கூறியதாகவும் தெரிவித்துள்ளார்.

கடவுச்சீட்டுக்களை முறையான அடிப்படையில் விநியோகம் செய்வதற்கு திட்டமொன்றை தாம் முன்மொழிந்திருந்ததாகத் தெரிவித்துள்ளார்.

குடிவரவு குடியகல்வு திணைக்களத்தினால் மோசடியான முறையில் 17 கடவுச்சீட்டுக்கள் தயாரிக்கப்பட்டதாக பிரதி அமைச்சர் பகிரங்கமாக குற்றம் சுமத்தியதாகத் தெரிவித்துள்ளார்.

இந்த குற்றச் செயலுடன் நிசாந்த என்ற நபருக்கு தொடர்பு இருப்பதாக அவர் கூறியதாகவும் தெரிவித்துள்ளார்.

அமைச்சர் கருத்து வெளியிட்ட போது அந்த இடத்தில் குடிவரவு குடியகல்வு திணைக்களத்தின் கடமையாற்றிய நிசாந்த என்ற பெயருடையவர் தாமே என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இவ்வாறான ஓர் மோசடி இடம்பெற்றதாக தமக்கு தெரியவில்லை எனவும் அவ்வாறு மோசடி இடம்பெற்றிருந்தால் குற்றவாளிகளை சட்டத்தின் முன் நிறுத்த வேண்டுமென அவர் கோரியுள்ளார்.

போலியாக குற்றம் சுமத்துவதனால் தமது நற்பெயருக்கு களங்கம் ஏற்பட்டுள்ளதாகவும் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டு ஏழு மாதங்கள் கடந்துள்ள நிலையில் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

குடிவரவு குடியகல்வு திணைக்களத்தில் கமராக்கள் மற்றும் ஆவணங்களை பரிசோதனை செய்வதன் மூலம் குற்றவாளிகள் யார் என்பதனை கண்டறிந்து கொள்ள முடியும் என அவர் தெரிவித்துள்ளார்.

17 கடவுச்சீட்டுக்கள் தயாரிக்கப்பட்டிருந்தால் அவர்கள் யார் எந்த முகவரியைச் சேர்ந்தவர்கள் என்பது குறித்து தகவல்களை பெற்றுக்கொள்ள முடியும் என அவர் தெரிவித்துள்ளார்.

எனவே இந்த குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் அம்பலப்படுத்தவும் குற்றவாளிகளை தண்டிக்கவும் நடவடிக்கை எடுக்குமாறு தாம் கோரிக்கை விடுப்பதாக குறித்த நிசாந்த என்ற குடிவரவு குடியகல்வு திணைக்கள அதிகாரி தெரிவித்துள்ளார். (ஐ)

# நல்லூர் திருவிழாவை முன்னிட்டு நித்தியஶ்ரீ மகாதேவனின் கர்நாடக இசை நிகழ்வு



வரலாற்று பிரசித்தி பெற்ற யாழ்ப்பாணம் நல்லூர் கந்தசுவாமி ஆலய வருடாந்திர மகோற்சவத்தை முன்னிட்டு , பிரபல கர்நாடக இசைக் கலைஞர் கலாநிதி நித்தியஸ்ரீ மகாதேவனின் கர்நாடக இசை நிகழ்வு நடைபெறவுள்ளது.

இந்திய துணைத்தூதரகத்தின் ஏற்பாட்டில் கர்நாடக இசை நிகழ்வு நடைபெறவுள்ளது.

நல்லூர் திருவிழாவை முன்னிட்டு நித்தியஸ்ரீ மகாதேவனின் கர்நாடக இசை நிகழ்வு ; வைொலயளசநந ஆயாயனநளயெ ஆரளளைஉ நுளநவெ துயககயெ 2025

அவரது இசை நிகழ்வு யாழ்ப்பாண கலாச்சார மண்டபத்தில் நாளைய தினம் (19) இரவு 07 மணிக்கு நடைபெறவுள்ளது. (ஐ)

# கடத்தல்காரர்களின் சொத்துக்களை பறிமுதல் செய்ய தயாராகும் அரசாங்கம்

கொழும்பு, ஓக 18

த்தல்காரர்களான தெமட்டகொட ருவான் மற்றும் கரந்தெனியே சுத்தா ஆகியோருக்கு சொந்தமான கோடிக்கணக்கான ரூபாய் மதிப்புள்ள சொத்துக்களை பறிமுதல் செய்ய நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

சட்டவிரோத சொத்துக்கள் விசாரணைப் பிரிவு இது தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது.

இந்த போதைப்பொருள் கடத்தல்காரர்கள் கட்டிடங்கள், வாகனங்கள் மற்றும் கோடிக்கணக்கான ரூபாய் மதிப்புள்ள பிற சொத்துக்கள் உட்பட போதைப்பொருள் கடத்தல் மூலம் ஏராளமான பணம் வருமானமாக பெற்றுள்ளதாக விசாரணைகளில் தெரியவந்துள்ளது. அதற்கமைய, அவர்களுக்கு சொந்தமான சொத்துக்களை கைப்பற்றி பறிமுதல் செய்வதற்கு தேவையான நடவடிக்கைகள் அடுத்த 2 வாரங்களுக்குள் அரசாங்கத்தால் மேற்கொள்ளப்படும் என பொலிஸ் தகவல் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

தெமட்டகொட ருவானுக்கு சொந்தமான 780 மில்லியன் ரூபாய்க்கு மேல் மதிப்புள்ள தெமட்டகொட நகரில் உள்ள ஒரு கட்டடமும் அரசாங்கத்தால் கையகப்படுத்தப்பட உள்ளது. (ஐ)

# சம்பள பிரச்சனை பொழுதுபோக்கு நிகழ்ச்சி போல் உள்ளது




பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கு நாளொன்றுக்கு வழங்கும் அடிப்படை சம்பளத்தினை அதிகரிக்கும் பேச்சுவார்த்தை தற்போதைய அரசாங்கம் ஒரு பொழுது போக்கு நிகழ்ச்சியாகவே எடுத்துக்கொண்டுள்ளது என மலையக மக்கள் முன்னணியின் தலைவரும், நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான வேலுசாமி இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

நுவரெலியாவில்நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் வேலுசாமி இராதாகிருஷ்ணன் இதனை குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

தற்போதைய ஜனாதிபதி மேதின கூட்டத்திலும் சரி பாராளுமன்றத்திலும் மற்றும் பல்வேறு பொது கூட்டங்களில் கலந்துகொண்டு சம்பள அதிகரிப்பை பற்றி பேசினாலும் இன்று வரை அது கைகூடவில்லை.

மேலும் பெருந்தோட்ட நிறுவனங்களின் சம்மேளனத்தினது பேச்சாளர் ரொஷான் ராஜதுரை பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கு உற்பத்தி அடிப்படையில் மாத்திரமே வேதன அதிகரிப்பொன்றை பெற்றுக்கொடுக்க முடியும் எனவும் அல்லது மீண்டும் அரசுக்கு தோட்டங்களை கையளிக்க வேண்டும் என அலட்சியமான பதில்களை தெரிவிக்கின்றனர்.

தற்போது சாதாரண அரிசி ஒரு கிலோ 250 ரூபாவை கடந்து போகிறது இந்நிலையில் எமது தொழிலாளர்கள் தொடர்ந்து பல்வேறு சிரமத்துக்கு மத்தியில் வாழ்ந்து வருகின்றன.

பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கு நாளொன்றுக்கு 1,350 ரூபாவை அடிப்படை சம்பளமாக மாத்திரம் வழங்க சம்பள நிர்ணய சபை கூட்டத்தில் தீர்மானித்து வழங்கி வருகிறது அத்துடன் வர்த்தமானி அறிவித்தல் ஊடாக அதிகரிக்கப்பட்ட 1,700 ரூபாய் சம்பளம் தமக்கு வழங்கப்படவில்லை என பல பெருந்தோட்ட தொழிலாளர்கள் விசனம் தெரிவித்து வருகின்றதும் தொடர் கதையாகவே உள்ளது என தெரிவித்தார். (ஐ)

# எதிர்க்கட்சியினரை கீழ்த்தரமாக விமர்சித்த சுரேஷ் கோபியின் பேச்சால் சர்ச்சை..!!

எதிர்க்கட்சியினரை கீழ்த்தரமாக விமர்சித்த பாஜக எம்.பி சுரேஷ் கோபியின் பேச்சால் சர்ச்சை ஏற்பட்டுள்ளது. நாடு முழுவதும் நடந்து முடிந்த தேர்தலில் வாக்குகள் முறைகேடு செய்யப்பட்டிருப்பதாக எதிர்க்கட்சிகள் கடந்த சில நாட்களாகவே குற்றம்சாட்டி வருகின்றனர். இத்தகைய குற்றசாட்டுகள் மக்களிடையே பரபரப்பை ஏற்படுத்திய நிலையில், கேரள மாநிலம் திருச்சூர் மாவட்டத்தில் நடைபெற்ற பாராளுமன்ற தொகுதிக்கான தேர்தலிலும் வாக்கு முறைகேடு நடைபெற்றிருப்பதாக எதிர்க்கட்சிகள் கடந்த சில நாட்களுக்கு முன்னதாக குற்றசாட்டை எழுப்பி இருந்தனர். இத்தகைய குற்றச்சாட்டிற்கு பாஜக வேட்பாளரும், எம்.பியுமான சுரேஷ்கோபி பொதுவெளியில் பேசாமல் தவிர்த்திருந்தார். இந்த நிலையில், திருச்சூர் மாவட்டத்தில் உள்ள சக்தன் தம்புரான் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்துவதற்காக வந்திருந்தார். மாலை அணிவிப்பு முடித்ததும் செய்தியாளர்களை சந்தித்த அவர், குற்றச்சாட்டுகளுக்கு பதில் தெரிவித்தார். கேரளாவில் உள்ள எதிர்க்கட்சிகளை வானரங்கள் (குரங்குகள்) என்ற கடுமையான சொல்லை பயன்படுத்தி அவர் விமர்சித்திருந்தார்.

இந்த குற்றச்சாட்டுகளுக்கு நேரடியாக பதில் அளிக்க மாட்டேன். தேவைப்பட்டால் நீங்கள் தேர்தல் ஆணையத்திடம் கேட்டு பதிலை பெற்று கொளுங்கள் என்று தெரிவித்திருந்தார். இத்தகைய பதில் கேரளாவில் எதிர்கட்சிகளிடையே பரபரப்பை ஏற்படுத்தியது. நாடாளுமன்ற தேர்தலில் நடைபெற்ற வாக்கு முறைகேடுகளை எதிர்க்கட்சிகள் என்னிடத்தில் கேட்க கூடாது. இதை தேர்தல் ஆணையத்திடம் கேட்டு உரிய பதிலை பெற்று கொள்ளுங்கள் என்று அவர் பேசியது சர்ச்சையை ஏற்படுத்தி உள்ளது. (ஐ)



# நிறுவனர், தலைவராக ராமதாஸ் தொடருவார் என தீர்மானம்: அன்புமணி மீது நடவடிக்கை எடுக்க ஒழுங்கு நடவடிக்கை குழு பரிந்துரை: 16 குற்றச்சாட்டுகளுடன் பாமக பொதுக்குழுவில் பரபரப்பு அறிக்கை



திண்டிவனம்: பாமக நிறுவனராகவும், தலைவராகவும் இனி ராமதாசே தொடர்ந்து செயல்படுவார் என பாமக சிறப்பு பொதுக்குழுவில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. மேலும், அன்புமணி மீது நடவடிக்கை எடுக்க பொதுக்குழுவில் ஒழுங்கு நடவடிக்கை குழு பரிந்துரை செய்துள்ளது, பாமகவில் தந்தை ராமதாஸ், மகன் அன்புமணி இடையேயான மோதல் 8 மாதங்களாக நீடித்து வருகிறது. இருவரும் மாறி, மாறி கட்சி நிர்வாகிகளை நீக்குவதும், சேர்ப்பதுமாக இருந்து வந்தனர். தற்போது கட்சியை முழுமையாக தங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரும் நடவடிக்கையில் இருவரும் இறங்கிவிட்டனர்.

கடந்த 9ம் தேதி மாமல்லபுரத்தில் பொதுக்குழுவை கூட்டிய அன்புமணி தனது தலைவர் பதவியை ஓராண்டுக்கு நீட்டித்துக்கொண்டார். இந்தப் பொதுக்குழுவுக்கு ராமதாசுக்கு அழைப்பு விடுத்தும் அவர் கலந்து கொள்ளவில்லை. ஆனாலும், பொதுக்குழு மேடையில் அவருக்காக ஒரு நாற்காலி மட்டும் ஒதுக்கப்பட்டிருந்தது. வன்னியர்களுக்கு இட ஒதுக்கீடு, சாதிவாரி கணக்கெடுப்பு உள்ளிட்ட 19 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டு தேர்தல் ஆணையத்துக்கு அனுப்பி வைத்தனர். கட்சி நிறுவனரான எனது அனுமதியின்றி நடந்த இந்த பொதுக்குழு கூட்டம் செல்லாது என ராமதாஸ் அறிவித்தார். இது குறித்து தேர்தல் கமிஷனுக்கும் புகார் அளித்தார்.

இந்நிலையில், புதுச்சேரி-திண்டிவனம் சாலையில் பட்டானூர் சங்கமித்ரா அரங்கில் பாமக மாநில சிறப்பு பொதுக்குழு கூட்டம் நேற்று காலை ராமதாஸ் தலைமையில் தொடங்கியது. கவுரவ தலைவர் ஜி.கே.மணி, அரசியல் ஆலோசனைக்குழு உறுப்பினர் தீரன், பொதுச்செயலாளர் முரளி சங்கர், பொருளாளர் சையது மன்சூர் உசேன், வன்னியர் சங்க தலைவர் பு.தா. அருள்மொழி, அருள் எம்எல்ஏ, ராமதாசின் மூத்த மகள் காந்திமதி, அவரது மகன் முகுந்தன் பரசுராமன், மகளிர் அணி சுஜாதா கருணாகரன் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

400-க்கும் மேற்பட்ட பொதுக்குழு உறுப்பினர்கள், 200-க்கும் மேற்பட்ட செயற்குழு உறுப்பினர்கள் மற்றும் மாவட்ட செயலாளர், தலைவர் என 4 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர். பொதுக்குழு கூட்டத்தில் எந்த இடத்திலும் அன்புமணி பெயரோ, புகைப்படமோ இடம் பெறவில்லை. ராமதாசின் படம் மட்டுமே பிரதானமாக இடம் பெற்றது. நிர்வாகிகள் தந்தை சொல்மிக்க மந்திரமில்லை, அய்யா முடிவே இறுதியானது என்ற பதாகைகளை ஏந்தி வந்திருந்தனர்.

கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு: பாமக நிறுவனராகவும், தலைவராகவும் இனி ராமதாசே தொடர்ந்து செயல்படுவார். வரும் 2026 சட்டமன்ற பொதுத் தேர்தலில் பாமக அதிக இடங்களில் மிகப்பெரிய வெற்றியை பெற உரிய கட்சிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி, வெற்றிக் கூட்டணியை உருவாக்க ராமதாசுக்கு முழு அதிகாரம் வழங்கப்படுகிறது. தேர்தல் சம்பந்தப்பட்ட பேச்சுக்களோ, கூட்டணி வைப்பதற்கான பேச்சுக்களோ நடத்தும் அதிகாரம், சட்ட விதிகளின்படி இந்தப் பொதுக்குழு வாயிலாக திருத்தப்பட்டு நிறுவனருக்கு முழு அதிகாரத்தையும் வழங்குகிறது.

வேறு எந்த பொறுப்பாளர்களும் கூட்டணிப் பேச்சு வார்த்தை செய்ய இயலாது. நிறுவனர் மட்டுமே அதனை செய்ய இயலும் என்ற புதிய விதி(35) உருவாக்கப்படுகிறது. வன்னியர்களுக்கு கல்வி வேலைவாய்ப்பில் 10.5% தனி இட ஒதுக்கீடை ராமதாஸ் தலைமையில் மீண்டும் போராடி உறுதியாக பெறுவோம் என்பது உள்ளிட்ட 37 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. பொதுக்குழுவில் அன்புமணி மீது நடவடிக்கை எடுக்கும்படி 16 குற்றச்சாட்டுகளுடன் ஒழுங்கு நடவடிக்கை குழு ராமதாசிடம் அறிக்கை சமர்ப்பித்தது. இதனை கட்சியின் கவுரவ தலைவர் ஜி.கே.மணி பொதுக்குழு உறுப்பினர்கள் முன்னிலையில் வாசித்தார்.

அதில், 2024ம் ஆண்டு புத்தாண்டு சிறப்பு பொதுக்குழுவில் மைக்கை தூக்கிப்போட்டு, பாமக நிறுவனருக்கு எதிராக பேசியது. பனையூரில் கட்சி அலுவலகம் திறந்துள்ளேன், அங்கே வாருங்கள் என கைப்பேசி எண் கொடுத்தது போன்ற செயல்கள் கட்சியை அன்றே பிளவுபடுத்தவும், குழப்பத்தை ஏற்படுத்தும் தலைமைக்கு கட்டுப்படாத செயல்களே என ஒழுங்கு நடவடிக்கை குழு கருதுகிறது. பாமக மாவட்ட செயலாளர்கள் கூட்டத்தில் பங்கேற்க வேண்டாம் என அன்புமணி, கைப்பேசியில் தொடர்பு கொண்டு, 100 மாவட்ட செயலாளர்களை தடுத்து நிறுத்தியது கட்சியை திட்டமிட்டு பிளவுபடுத்த நினைத்த கட்சி விரோத நடவடிக்கை.

தைலாபுரம் தோட்டத்தில் ராமதாசின் இருக்கைக்கு அருகில் ஒட்டு கேட்பு கருவியை வைத்தது. பொதுக்குழு என்ற பெயரில் ஒரு தனி நாற்காலி போட்டு, துண்டு அணிவித்து அந்த கூட்டத்தில் புத்தி சுவாதீனம் இல்லாத சில விஷமிகளை துண்டிவிட்டு, அந்த சிலரும் கடவுள் சிலை முன்பு நின்று ராமதாசுக்கு, நல்ல புத்தியை கொடு என்பது யாரும் ஏற்காத ஒழுங்கீனமான செயலாக கருதப்படுகிறது. எவ்வித அனுமதி பெறாமல் தன்னிச்சையாக உரிமை மீட்க, தலைவரை காக்க எனும் பெயரில் நடைபயணத்தை மேற்கொள்வது கபட நாடகமாகவே கருதுகிறது.

பாமக தலைமை அலுவலகத்தின் முகவரியை மாற்றியது, ராமதாஸ் நியமனத்தை செல்லாதது என அறிவித்தது. ஜி.கே,மணி, சேலம் அருள் ஆகியோர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் கேலி, கிண்டலாக பேசி சிரித்தது என 16 வகையான புகார்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இந்த அறிக்கையை பரீசிலித்து 7 நாட்களுக்கு பிறகு அடுத்த கட்ட நடவடிக்கையை ராமதாஸ் அறிவிப்பார் என தெரிகிறது.

தொண்டர்கள் விரும்பும் கூட்டணியை அமைப்பேன்: ராமதாஸ் உறுதி

பொதுக்குழுவில் ராமதாஸ் பேசுகையில், பொதுக்குழு தீர்மானங்கள் ஒரு சமுதாயதுக்கானது அல்ல, 8 கோடி தமிழ் மக்களின் நலனுக்கானது. ஒட்டுமொத்த தமிழ்நாட்டுக்கானது. சாதிவாரி கணக்கெடுப்பு நடத்தக்கோருவது அனைவருக்காகவும்தான். அதனாலே சொல்கிறேன். எல்லா சமுதாயமும் என் பின்னால் வாருங்கள், நான் காட்டுகிற வழியில் சென்றால் எல்லாமும் கிடைக்கும். பொதுக்குழு உறுப்பினர்கள் நாம் எந்த கூட்டணியோடு, என ஆவலோடு எதிர்பார்க்கிறீர்கள். இயற்கையான கூட்டணி எங்கே கிடைக்கும். வெற்றிக்கூட்டணி எங்கே கிடைக்கும் என்று ஆவலோடு எதிர்பார்க்கிறீர்கள்.

கூட்டணி வைப்பதற்கான முழு அதிகாரத்தை எனக்கு வழங்கியுள்ளீர்கள். நிச்சயமாக உங்களில் உள்ளங்களிலே, மனங்களிலே என்ன நினைக்கிறீர்கள் என்பதை நானறிவேன். தொண்டர்கள் விரும்பியவாறு நல்ல கூட்டணியை ஏற்படுத்துவோம். தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலினை கேட்பதெல்லாம், நீங்கள் நினைத்தால் ஒருவாரத்திலே 10.5 சதவீத இடஒதுக்கீடு கொடுக்க முடியும். சாதிவாரி கணக்கெடுப்பு எடுப்பது உங்களால் முடியும், பல மாநிலங்களில் செய்திருக்கிறார்கள். 10.5 சதவீத இட ஒதுக்கீட்டுக்காக போராடுவோம். பொதுக்குழுவின் 37 தீர்மானங்களும் தமிழ்நாட்டின் நலனுக்கானது. இதனை தமிழக அரசு நிறைவேற்றித்தர வேண்டும், என்றார்.


அன்புமணி இடத்தில் காந்திமதி

கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் இதே பட்டானூரில் நடந்த புத்தாண்டு சிறப்பு பொதுக்குழு கூட்டத்தில் தான் இளைஞர் அணி தலைவராக முகுந்தன் பரசுராமனை ராமதாஸ் அறிவித்தார். அப்போது ராமதாசுக்கு பக்கத்தில் உட்கார்ந்திருந்த அன்புமணி மேடையிலேயே மைக்கை தூக்கிபோட்டு எதிர்ப்பு தெரிவித்தார். இந்த சம்பவத்துக்கு பிறகு தான் பாமக இரண்டாக பிளவு பட்டது. கட்சி பிளவு பட்ட இடத்திலிருந்தே அதற்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்க நினைத்த ராமதாஸ், அன்புமணி அமர்ந்திருந்த அதே இடத்தில் தனது மூத்த மகளும் முகுந்தனின் தாயுமான காந்திமதியை அமர வைத்திருந்தார்.

பொதுக்குழு நிகழ்வுகள் வீடியோவில் பதிவு

பொதுக்குழு கூட்டத்துக்கு வந்த அனைத்து நிர்வாகிகளுக்கும் மாவட்ட செயலாளர்கள் முன்னிலையில் ஒரு விண்ணப்ப படிவம் வழங்கப்பட்டது. அதில் பெயர், முகவரி போன்ற விபரங்கள் பெறப்பட்டு புகைப்படம் ஒட்டி கையெழுத்து வாங்கிக்கொண்டனர். பின்னர் அவர்களுக்கு அடையாள அட்டை வழங்கப்பட்டது. இந்த அடையாள அட்டை உள்ளவர்கள் மட்டுமே அரங்கத்துக்குள் அனுமதிக்கப்பட்டனர். பொதுக்குழு கூட்ட நிகழ்ச்சிகள் அனைத்தும் வீடியோவில் பதிவு செய்யப்பட்டது. தேர்தல் ஆணையத்துக்கு அனுப்புவதற்காக, இந்த நடவடிக்கையை மேற்கொள்வதாக நிர்வாகிகள் தெரிவித்தனர்.

# பெண்கள் மீதான வன்முறை



மேற்கு வங்கத் தலைநகர் கொல்கத்தாவில் உள்ள ஆர்.ஜி.கர் மருத்துவமனையில் பயிற்சி மருத்துவராகப் பணியாற்றிவந்த முதுநிலை மருத்துவ மாணவி ஒருவர், ஆகஸ்ட் 9ஆம் தேதி மருத்துவமனை வளாகத்தில் வைத்துப் பாலியல் வன்கொடுமை செய்யப்பட்டுக் கொல்லப்பட்டார். நாடு முழுவதும் இச்சம்பவம் கொந்தளிப்பை ஏற்படுத்தியது. இந்தக் கொடூரக் குற்றத்துக்கு நீதி கேட்டு மருத்துவர்கள், கல்லூரி மாணவர்கள், மக்கள் போராட்டத்தில் இறங்கினர்.

இச்சம்பவத்தின் தாக்கம் சிறிதும் குறையாத நிலையில், அசாமில் சிறுமி ஒருவர் கூட்டுப் பாலியல் வல்லுறவுக்கு உள்ளாக்கப்பட்டது, அம்மாநிலத்தில் அதிர்ச்சியை ஏற்படுத்தியிருக்கிறது.

தமிழகத்திலும், கிருஷ்ணகிரி மாவட்டத்தில் என்சிசி பயிற்சி வழங்குவதாகப் பள்ளி மாணவிகள் பாலியல் துன்புறுத்தலுக்கு உள்ளாக்கப்பட்டது கடும் அதிர்வலையை ஏற்படுத்தியது. இவ்வாறு, இந்தியாவில் தொடர்ச்சியாகப் பெண்கள் மீது ஏவப்படும் பாலியல் வன்முறைகள், சீண்டல்கள் பெண்களின் பாதுகாப்புக்குப் பெரும் அச்சுறுத்தலாகி இருக்கின்றன.



குற்றங்களும் குற்றவாளிகளும்: தேசியக் குற்ற ஆவணக் காப்பகம் 2023இல் அறிக்கை ஒன்றை வெளியிட்டது. அதில் 2022இல் பெண்கள் மீதான வன்முறை 4மூ அதிகரித்திருப்பதாகச் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது. 2022இல், பெண்கள் மீதான வன்முறைச் சம்பவங்களின் எண்ணிக்கை 4,45,256. இந்த எண்ணிக்கை 2021இல் 4,28,278ஆகவும், 2020இல் 3,71,503 ஆகவும் இருந்தது.

பாலியல் வன்கொடுமையை மட்டும் எடுத்துக்கொண்டால், 2012இல் டெல்லி நிர்பயா சம்பவத்துக்குப் பிறகு, பாலியல் குற்றங்களைத் தண்டிப்பதற்கான சட்டங்கள் வலுப்படுத்தப்பட்டன. பாலியல் வல்லுறவு என்பதற்கான வரையறையும் விரிவுபடுத்தப்பட்டது. பாலியல் குற்றங்களை விசாரிப்பதற்கான சிறப்பு நீதிமன்றங்கள் உருவாக்கப்பட்டன. ஆனால், இந்த வகையிலான குற்றங்கள் அதிகரித்துக்கொண்டுதான் இருக்கின்றன. 2012இல் 25,000 பாலியல் வல்லுறவு வழக்குகள் பதிவாகின. 2022இல் அந்த எண்ணிக்கை 31,000 ஆக அதிகரித்துள்ளது.

பெண்கள் மீதான குற்றச் சம்பவங்களில் கணவர் அல்லது அவரது உறவினர்களின் மூலம் அரங்கேறும் குடும்ப வன்முறையே முதன்மையாக உள்ளது. 31.4மூ பெண்கள் தங்கள் கணவர் வீட்டில் இத்தகைய சித்ரவதைக்கு உள்ளாகின்றனர். 2022இல் வரதட்சிணைத் தடுப்புச் சட்டத்தின் கீழ் 13,479 வழக்குகள் பதிவுசெய்யப்பட்டுள்ளன. இந்தப் பட்டியலில், பெண் கடத்தல் (19.2மூ), பெண்கள் மீதான தாக்குதல் (18.7மூ), பாலியல் வல்லுறவு (7.1மூ) போன்ற குற்ற நிகழ்வுகள் குறிப்பிடப்பட்டிருக்கின்றன.

சட்டங்களும் நடைமுறையும்: பெண்களுக்கு எதிரான குற்றச் சம்பவங்களைத் தடுத்திடப் பல்வேறு சட்டங்கள் இந்தியாவில் இயற்றப்பட்டுள்ளன. வரதட்சிணை தடைச் சட்டம் (1961) வரதட்சிணை பெறுவதையோ கொடுப்பதையோ தடை செய்கிறது.

பெண்கள் பாலியல் தொழிலில் ஈடுபடுத்தப்படுவதை பாலியல் தொழில் தடுப்புச் சட்டம் (1956) தடுக்கிறது. பெண்களை அநாகரிகமாகக் காட்சிப்படுத்துவதைத் தடுக்கும் சட்டம் 1986 (வுஉநு ஐனேநுஊநுவே சுநீசுநுளுநுவேயுவுஐழுே முகு றுழுஆநுே (ீசுழுஉஐடீஐவுஐழுே) யுஊவு1986), திரைப்படம், விளம்பரம் போன்றவற்றில் பெண்களை அநாகரிகமான முறையில் சித்தரிப்பதைத் தடுக்கிறது.

ஒரு பெண் தனது கணவர் வீட்டில் பாதுகாப்பாக வாழ்வதற்கான அம்சங்களை ‘குடும்ப வன்முறையிலிருந்து பெண்களைப் பாதுகாத்தல் சட்டம் (2005)’ வலியுறுத்துகிறது. பணியிடத்தில் பெண்களுக்கு எதிரான பாலியல் துன்புறுத்தல் (தடுப்பு, தடை மற்றும் தீர்வு) சட்டமும் (2013) அமலில் உள்ளது. எனினும் இச்சட்டங்களை நடைமுறைப்படுத்துவதில் நிலவும் சிக்கல்களினால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு நீதி கிடைப்பதில் தாமதம் ஏற்படுகிறது.

தாமதமாகும் நீதி: இந்தியாவில் பொதுவாகவே குற்றவியல் வழக்குகளை விசாரிப்பதில் காவல் துறை - நீதிமன்றங்களிடம் சுணக்கம் நிலவுகிறது. பாலியல் துன்புறுத்தல் வழக்குகளை விசாரிக்க, அனுபவம் பெற்ற காவல் துறை அதிகாரிகளின் எண்ணிக்கை குறைவாக உள்ளது. இதனால் வழக்கு விசாரணையிலும், குற்றப்பத்திரிகை தாக்கல் செய்வதிலும் சிக்கல் ஏற்படுகிறது.

அடுத்து நீதிமன்ற விசாரணைண் ஒரு வழக்கு விசாரணைக்குக் குறைந்தபட்சம் மூன்று முதல் ஐந்து ஆண்டுகளை நீதிமன்றங்கள் எடுத்துக்கொள்கின்றன. மேல் முறையீட்டுக்கு வழக்கு கொண்டுசெல்லப்பட்டால், அது முடிவடைய 10 - 15 வருடங்கள் ஆகக்கூடும். இதனால் பாதிக்கப்பட்ட பெண், வழக்கைத் தொடர முனைப்பு காட்டாத நிலை ஏற்படுகிறது.

2022 நிலவரப்படி, இந்தியாவில் 801 மாவட்டங்களில் 4.4 லட்சம் பாலியல் துன்புறுத்தல் சார்ந்த வழக்குகள் நிலுவையில் இருப்பதாக உச்ச நீதிமன்றம் கூறியுள்ளது. வழக்குகளை விரைந்து முடிக்க விரைவு நீதிமன்றங்கள் இயங்கினாலும், அவை வழக்குகளை முடிப்பதில் ஆர்வம் காட்டுவதில்லை என்கிற குற்றச்சாட்டைச் சட்ட நிபுணர்களும் முன்வைக்கின்றனர்.

பிற நாடுகளில்: உலகளவில் மூன்று பேரில் ஒரு பெண் ஏதேனும் ஒரு வகையில் பாலியல் துன்புறுத்தலுக்கு உள்ளாக்கப்படுவதாக உலகச் சுகாதார அமைப்பு கூறுகிறது. தென் ஆப்ரிக்காவில் பெண்களுக்கு எதிரான குற்றச் சம்பவங்கள் அதிகம் நடைபெறுகின்றன. ஆப்கானிஸ்தான், காங்கோ, சோமாலியா உள்ளிட்ட நாடுகளில் பெண்கள் மீதான வன்முறைகள் கூடுதலாக உள்ளன.

உலக நாடுகளில் குடும்ப வன்முறைக்கு எதிராகவும், பணியிடங்களில் பாலியல் துன்புறுத்தலைத் தடுக்கவும் சட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன. எனினும் இச்சட்டங்கள் எல்லாம் பெண்கள், சிறுமிகள் மீதான வன்முறைகளைத் தடுக்கின்றனவா என்றால், இல்லை என்றே உலகச் சுகாதார அமைப்பு பதிலளிக்கிறது. இச்சட்டங்களில் நிலவும் குளறுபடிகள் காரணமாகக் குற்றவாளிகளுக்குத் தண்டனையை உறுதிசெய்வதில் கால தாமதம் எற்படுவதாக அவ்வமைப்பு கூறுகிறது.

வன்முறை, பாலியல் துன்புறுத்தல் போன்ற குற்றங்கள் பெண்களின் தனிப்பட்ட வாழ்க்கையில் பாதிப்பை ஏற்படுத்துவதுடன் அவர்களின் சமூகப் பங்களிப்பையும் குறைக்கின்றன. இதனால் பல்வேறு உரிமைகளைப் பெண்கள் இழக்கின்றனர். இந்நிலையைச் சீரமைக்கச் சமூகத்தில் பாலினச் சமத்துவம், பொருளாதாரத் தற்சார்பு, காவல் துறை, நீதிமன்றம் போன்றவற்றில் பெண்களுக்குச் சம வாய்ப்பு என ஆரோக்கியமான சூழல் உருவாவதை அரசு உறுதிப்படுத்த வேண்டும்.




கல்வி, வேலைவாய்ப்பு, அதிகாரத்தில் பெண்கள் தன்னிறைவைப் பெற வழி ஏற்படும்போது, குடும்ப வன்முறையில் அவர்கள் சிக்கும் சாத்தியம் குறைகிறது. பெண்களுக்கு எதிரான குற்றங்களைத் தடுத்திடக் காவலர்கள் பற்றாக்குறை உடனடியாகச் சரிசெய்யப்பட வேண்டும். குற்றவியல் சட்டங்களை மேம்படுத்தி, பாலியல் வழக்குகளில் குற்றம்சாட்டப்படும் குற்றவாளிகளுக்கு விரைவாகத்

**பாலியல் வன்கொடுமையை மட்டும் எடுத்துக்கொண்டால், 2012இல் டெல்லி நிர்பயா சம்பவத்துக்குப் பிறகு, பாலியல் குற்றங்களைத் தண்டிப்பதற்கான சட்டங்கள் வலுப்படுத்தப்பட்டன. பாலியல் வல்லுறவு என்பதற்கான வரையறையும் விரிவுபடுத்தப்பட்டது. பாலியல் குற்றங்களை விசாரிப்பதற்கான சிறப்பு நீதிமன்றங்கள் உருவாக்கப்பட்டன. ஆனால், இந்த வகையிலான குற்றங்கள் அதிகரித்துக்கொண்டுதான் இருக்கின்றன. 2012இல் 25,000 பாலியல் வல்லுறவு வழக்குகள் பதிவாகின. 2022இல் அந்த எண்ணிக்கை 31,000 ஆக அதிகரித்துள்ளது.**

# குழந்தைகளுக்காக போரை நிறுத்துங்கள் ரஷ்ய அதிபர் புடினுக்கு டிரம்ப் மனைவி மெலனியா கடிதம்



உக்ரைன் போரை முடிவுக்கு கொண்டு வருவது தொடர்பாக அமெரிக்காவின் அலாஸ்காவில் அதிபர் டிரம்புக்கும், ரஷ்ய அதிபர் புடினுக்கும் இடையேயான பேச்சுவார்த்தை கடந்த 15ம் தேதி நடந்தது. இதில் எந்த ஒப்பந்தமும் ஏற்படவில்லை. இந்த சந்திப்பின் போது டிரம்ப் தனது மனைவி மெலனியா டிரம்ப் எழுதிய கடிதத்தை அதிபர் புடினிடம் வழங்கி உள்ளார். அந்த கடிதத்தில் மெலனியா, உக்ரைன் பெயரை குறிப்பிடாமல், "புவியியல், அரசியல், சிந்தாத்தத்திற்கு அப்பாற்பட்டவர்கள் அப்பாவி குழந்தைகள்.

அவர்களைப்பற்றி சிந்திக்க வேண்டும். குழந்தைகளின் முகத்தில் சிரிப்பை மீட்டெடுக்க வேண்டும். அப்பாவியான குழந்தைகளை பாதுகாப்பதன் மூலம் நீங்கள் ரஷ்யாவுக்கு மட்டுமல்ல மனித குலத்திற்கே சேவை செய்பவர் ஆவீர்கள். இதை உங்களால் மிக எளிதாக செய்து விட முடியும். குழந்தைகளுக்காக ஒப்பந்தம் செய்வதற்கு உங்கள் பேனாவை சுழற்றுவதை பரிசீலியுங்கள்" என கூறி உள்ளார். (ஐ)



## குழந்தை பெற்றெடுக்கும் ரோபோக்களை உருவாக்க சீனாவில் புதிய முயற்சி

சீன விஞ்ஞானிகள் மனித கருவை சுமந்து குழந்தை பெற்றெடுக்கும் ரோபோக்களை உருவாக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர்.

நம் அண்டை நாடான சீனா, 'ரோபோட்டிக்' தொழில்நுட்பத்தில் முன்னணியில் உள்ளது. அங்கு சமீபத்தில் ரோபோக்கள் விற்பனைக்கு என்றே பிரத்யேக வணிக வளாகம் திறக்கப்பட்டது.

இந்நிலையில், சீனாவின் குவாங்சோவைச் சேர்ந்த 'கைவா டெக்னாலஜி' நிறுவனம் கருவை சுமந்து குழந்தை பெற்றெடுக்கும் திறன் உடைய ரோபோவை உருவாக்கும் ஆய்வு பணியில் ஈடுபட்டுள்ளது. இந்த ஆய்வுக்கு சிங்கப்பூரின் நன்யாங் தொழில்நுட்ப பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த விஞ்ஞானி டாக்டர் ஜாங் கிபெங் தலைமை தாங்குகிறார்.

வெட்டு, குத்து, சுட்டு தள்ளுவது எல்லாம் வீரம் அல்ல என்று சொல்லிக் கொடுங்கள்

இந்த தொழில்நுட்பம் வெற்றிபெற்றால், மலட்டுத்தன்மை உள்ள தம்பதியர் அல்லது உயிரியல் கர்ப்பத்தை விரும்பாதவர்களுக்கு இது உதவியாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இது குறித்து விஞ்ஞானி ஜாங் கிபெங் கூறுகையில், "இந்த தொழில்நுட்ப ஆய்வு தற்போது மேம்பட்ட நிலையில் உள்ளது. ரோபோவின் வயிற்றில் செயற்கை கருப்பையை பொறுத்தி, செயற்கை முறையில் கருத்தரித்தல் செய்யப்படும். கரு அதில் வளரும். இந்த ரோபோவின் மாதிரி அடுத்த ஆண்டு அறிமுகமாகும்," என்றார்.

இந்த தொழில்நுட்பம், 2017ல் செயற்கை கருப்பை திரவத்துடன் கூடிய, 'பயோபேக்' மூலம் ஆடுகள் கருவிலிருந்து வளர்க்கப்பட்ட ஆய்வை அடிப்படையாகக் கொண்டது.

இந்த தொழில்நுட்பம் வெற்றியடைந்தால் ,தாயுடன், கருவில் வளரும் குழந்தைக்கு எப்படி பிணைப்பு ஏற்படும், அதற்கு மன ரீதியாக என்ன தாக்கம் ஏற்படும் போன்ற கேள்விகள் முன் வைக்கப்படுகின்றன. (ஐ)

## அமெரிக்க - உக்ரைன் அதிபர்கள் இன்று சந்திப்பு நெருக்கடிகளை சமாளிப்பாரா உக்ரைனின் ஜெலன்ஸ்கி



ரஷ்ய அதிபர் விளாடிமிர் புடின் அமெரிக்கா சென்று திரும்பிய நிலையில், இன்று உக்ரைன் அதிபர் வோலோடிமிர் ஜெலன்ஸ்கி, அமெரிக்க அதிபர் டொனால்டு டிரம்பை நேரில் சந்தித்து பேச்சு நடத்த உள்ளார். கிழக்கு ஐரோப்பிய நாடான உக்ரைன் அதிபர் ஜெலன்ஸ்கி, ரஷ்யா தங்கள் நாட்டை ஆக்கிரமிக்கும் என்று அஞ்சி, சர்வதேச ராணுவ அமைப்பான நேட்டோவில் இணைய, 2022ல் முயற்சித்தார்.

இதற்கு ரஷ்ய அதிபர் புடின் கடும் எதிர்ப்பு தெரிவித்தார். அதனால் தங்கள் நாட்டின் இறையாண்மைக்கு ஆபத்தும் என்றும், இணையும் முயற்சியை கைவிடாவிட்டால் போர் தொடுப்போம் என்றார்.

13,000 பேர் பலி அதை ஜெலன்ஸ்கி கேட்கவில்லை. இதனால், 2022 பிப்ரவரியில் உக்ரைன் மீது ரஷ்யா போரை துவங்கியது. மூன்று ஆண்டுகளுக்கும் மேலாக நடந்து வரும் இந்த போரில் இதுவரை 13,000க்கும் மேற்பட்ட உக்ரைன் மக்கள் இறந்து உள்ளனர்.

அவர்களில் 700க்கும் மேற்பட்டோர் குழந்தைகள் என ஐ.நா., மனித உரிமைகள் கமிஷனின் புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன. ரஷ்யாவில் ஏற்பட்ட பாதிப்பு குறித்து எந்த தகவலும் வெளியாகவில்லை. மூன்று ஆண்டு கால போரில், ரஷ்யாவுடன் எல்லையை பகிரும் உக்ரைனின் கிழக்கு பகுதிகளான டொனெட்ஸ்க், லுஹான்ஸ்க் ஆகியவற்றை ரஷ்யா கைப்பற்றிவிட்டது.

மேலும் பல பகுதிகள் ரஷ்யாவால் கைப்பற்றப்பட்டன. ஆனால் அவற்றை உக்ரைன் மீட்டுவிட்டது.

இந்நிலையில், போர் நிறுத்தம் குறித்து அமெரிக்க அதிபர் டிரம்ப் மற்றும் ரஷ்ய அதிபர் புடின் நேற்று முன்தினம், அமெரிக்காவின் அலாஸ்காவில் சந்தித்து பேசினர்.

இதில் போர் நிறுத்த உடன்படிக்கை எட்டவில்லை, எனினும் அதற்கான பெரும் முன்னேற்றம் இந்த பேச்சில் ஏற்பட்டதாக இருவரும் தெரிவித்தனர்.

3 மணி நேரப்பேச்சில் முடிவு எதுவும் இல்லை புடின்-டிரம்ப் பேசினர் சிரித்தனர் கைகுலுக்கினர் - அவ்வளவு தான்!

இனி, போர் நிறுத்தம் ஜெலன்ஸ்கி கையில் உள்ளது என்று டிரம்ப் கூறியிருந்தார். புடின் உடனான கூட்டம் குறித்து ஜெலன்ஸ்கியை தொலைபேசியில் தொடர்புகொண்டு ஒன்றரை மணி நேரம் டிரம்ப் விளக்கினார். இதைத் தொடர்ந்து வாஷிங்டனில் சந்திக்கவும் அழைப்பு விடுத்தார்.

கேள்விக்குறி அவரது அழைப்பை ஏற்று உக்ரைன் அதிபர் ஜெலன்ஸ்கி இன்று டிரம்பை சந்திக்கிறார். முன்னதாக பிப்ரவரி 28ல் டிரம்ப் - ஜெலன்ஸ்கி சந்திப்பு நடந்தது. அப்போது ஜெலன்ஸ்கியிடம் டிரம்ப் காரசாரமாக பேசினார் கடிந்துகொண்டார்.

வெள்ளை மாளிகைக்கு உரிய மரியாதையை தராமல் நடந்ததாக, அமெரிக்க துணை அதிபர் ஜே.டி.வான்ஸ் குற்றம்சாட்டினார். இதனால் ஜெலன்ஸ்கி பாதியிலேயே வெளியேறினார்.

இந்நிலையில், இரு தலைவர்களும் மீண்டும் இன்று சந்தித்து பேச உள்ளனர். இதில், ரஷ்யா கைப்பற்றிய பகுதிகளை அவர்களுக்கு விட்டுத்தருவது, உக்ரைனுக்கு பல லட்சம் கோடி ரூபாய் ராணுவ உதவி செய்ததற்காக, அந்நாட்டின் அரிய கனிமங்களை பயன்படுத்த அமெரிக்காவுக்கு அனுமதி அளிப்பது குறித்து விவாதிக்கப்படும் என தெரிகிறது.

இதற்கு ஜெலன்ஸ்கி சம்மதிப்பாரா என்பது பெரிய கேள்விக்குறி. இதனால் இந்த முறையும் ஜெலன்ஸ்கி - டிரம்ப் இடையே வார்த்தை மோதல் ஏற்பட வாய்ப்பு உள்ளது. அதை தவிர்க்க வேண்டும் என்பதில் ஐரோப்பிய யூனியன் கவனமுடன் உள்ளது.

எனவே ஜெலன்ஸ்கி உடன் ஐரோப்பிய யூனியன் தலைவர் உருசுலா வான் டேர், ஜெர்மன் பிரதமர் பிரெட்ரிச் மெர்ஸ், பிரான்ஸ் அதிபர் இம்மானுவேல் மேக்ரான், பின்லாந்து அதிபர் அலெக்சாண்டர் ஸ்டப் என ஒரு பெரும் படை டிரம்பை சந்திக்க உள்ளது. (ஐ)

## யாழ்ப்பாணத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

போராட்டத்துக்கு ஆதரவு வழங்கப்பட்ட நிலையில், பெருமளவான இடங்களில் இயல்வு நிலை காணப்பட்டது.

காலையில் சில இடங்களில் கடைகள் பூட்டப்பட்டு இருந்தாலும் , பல இடங்களில் கடைகள் திறக்கப்பட்டு இருந்தமையும் அவதானிக்க முடிந்தது.

அதேவேளை, போக்குவரத்துச் சேவைகள் வழமை போன்று இயங்கி வந்ததுடன் அரச திணைக்களங்கள், பாடசாலைகள் என்பனவும் வழமை போன்று இயங்கின.

## திருமலையில்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

திருகோணமலை மாவட்டத்தில் இன்று ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.

திருகோணமலை நகர் பகுதியில் பல கடைகள் மூடப்பட்டிருந்தன. சில கடைகள் மாத்திரம் திறக்கப்பட்டிருந்தன.

திருகோணமலை பிரதான சந்தை திறக்கப்பட்டிருந்த நிலையிலும் வியாபார நடவடிக்கைகள் வளமை போன்று இடம்பெறவில்லை.

திருகோணமலை மாவட்டத்தின் பல இடங்களில் மக்களின் நடமாட்டம் குறைந்து காணப்பட்டது.

## வவுனியாவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

விடுக்கப்பட்டிருந்த நிலையில், வவுனியா மாவட்டத்தில் பல இடங்களில் பொதுமக்களின் செயற்பாடுகள் ஸ்தம்பிதமடைந்திருந்தன. சில இடங்களில் மாத்திரம் பொதுமக்களின் செயற்பாடுகள் இயல்பு நிலையில் இருந்தன.

வவுனியா நகரத்தில் அநேக வர்த்தக நிலையங்கள் பூட்டப்பட்டிருந்தன. சில வர்த்தக நிலையங்கள் மாத்திரம் திறக்கப்பட்டிருந்தன.

ஹர்த்தால் போராட்டத்துக்கு வவுனியா உள்ளூர் விளைபொருள் உற்பத்தியாளர் சங்கம் தனது முழுமையான ஆதரவை வழங்கியிருந்தது. அவர்களது மொத்த வியாபார சந்தைக் கடைத்தொகுதிகள் முழுமையாக மூடப்பட்டிருந்தன.

இதேவேளை, பழைய பஸ் நிலையம் மற்றும் பசார் வீதியில் உள்ள இஸ்லாமிய வியாபார நிலையங்களில் சில வர்த்தக நிலையங்கள் மட்டும் திறந்திருந்தன.

இதேவேளை, புறநகர்ப் பகுதிகளான குருமன்காடு, செட்டிகுளம், நெடுங்கேணி, கனகராயன்குளம், புளியங்குளம் பகுதிகளில் அநேககமான வர்த்தக நிலையங்கள் ஹர்த்தாலுக்கு ஆதரவைத் தெரிவித்து பூட்டியிருந்தன

## முல்லைத்தீவு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

உயிரிழந்தமையைக் கண்டித்தும் வடக்கு, கிழக்கில் இன்று இடம்பெற்ற ஹர்த்தாலால் முல்லைத்தீவு மாவட்டம் முடங்கியது.

வர்த்தக நிலையங்கள் மூடப்பட்டிருந்தன. போக்குவரத்துச் சேவைகள் முடங்கியிருந்தன. மக்கள் நடமாட்டம் இன்றி வீதிகள் வெறிச்சோடிக் காணப்பட்டன.

## பெருமளவு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஹர்த்தால் போராட்டத்தால் மன்னார் மாவட்டத்தின் இயல்பு நிலை பாதிக்கப்பட்டது.

பெரும்பாலான வர்த்தக நிலையங்கள் மூடப்பட்டிருந்தன. அரச மற்றும் தனியார் போக்குவரத்துச் சேவைகள் வழமை போல் இடம்பெற்றன. ஆனால், வீதிகளில் மக்களின் நடமாட்டம் குறைவாகக் காணப்பட்டது.

மன்னார், பஜார் பகுதியில் மாத்திரம் சில வர்த்தக நிலையங்கள் திறக்கப்பட்டிருந்தன.

## ஹர்த்தாலால்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கோரி இன்று முன்னெடுக்கப்பட்ட ஹர்த்தால் போராட்டத்தால் கிளிநொச்சி மாவட்டத்தில் மக்களின் இயல்பு நிலை பாதிக்கப்பட்டது.

கிளிநொச்சி நகரில் காலையில் சகல கடைகளும் மூடப்பட்டிருந்தன. வீதிகளில் மக்கள் நடமாட்டம் குறைவாகக் காணப்பட்டது.

## ஹர்த்தால் வெற்றி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பிமல் ரத்நாயக்க உள்ளிட்டவர்கள் எம்மைத் தொடர்பு கொண்டு பேசி இருந்தனர். முத்துஐயன்கட்டு இராணுவ முகாமை அங்கிருந்து அகற்ற நடவடிக்கை எடுத்துள்ளோம் என அவர்கள் கூறினார்கள். இதுவே எமது வெற்றி.

இந்தக் ஹர்த்தால் ஓர் அடையாளப் போராட்டமே. இனிவரும் காலங்களில் வடக்கில், கிழக்கில் இருந்து இராணுவ முகாம்களை அகற்றக் கோரிப் போராட்டங்களை தொடர்ந்து முன்னெடுப்போம்." - என்றார்.

# கொழும்பில் அடுக்குமாடி குடியிருப்பில் வசிப்பவர்களுக்கு காத்திருக்கும் ஆபத்து



கொழும்பு வடக்கு பகுதிகளில் பல தொடர் மாடி குடியிருப்புகளில் வாழும் மக்கள் ஆபத்தான நிலையில் வாழ்வதாகவும் சில தொடர்மாடி குடியிருப்புக்கள் உடைந்து விழும் நிலையில் காணப்படுவதாகவும் தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் நஜீத் இந்திக்க தெரிவித்துள்ளார்.

மக்கள் இது தொடர்பில் பல முறைப்பாடுகளை தெரிவித்ததை அடுத்து, இன்று கொழும்பு வடக்கு பகுதிக்கு கண்காணிப்பு விஜயம் செய்து நிலைமைகளை ஆராய்ந்தப் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

தொடர்மாடி குடியிருப்பு புனரமைப்பு தொடர்பில் கடந்த அரசாங்கத்தில் கோரப்பட்ட டெண்டர்களில் அதிகமான தொகை குறிப்பிடப்பட்டுள்ளதாகவும் அதிகாரிகள் அப்போது தெரிவித்தனர். அதனாலே அவற்றை புனரமைப்பு செய்ய முடியாமலுள்ளது. கடந்த ஆட்சிக் காலத்தில் முறையற்ற திட்டத்தில் அவசரமாக கட்டப்பட்ட பல தொடர்மாடிகள் இருக்கின்றன. அவற்றில் மக்களை எவ்வித திட்டங்களும் இல்லாமல் குடியேற்றியுள்ளனர்.

இதனால் மக்கள் பல பிரச்சினைகளில் சிக்கியுள்ளனர். கழிவுகள் நிறைந்து வழிதல் மற்றும் போதைப் பொருள் பாவிப்பவர்களின் அதிகரிப்பு போன்ற பல்வேறு பிரச்சினைகளை நாம் படிப்படியாக தீர்க்கவுள்ளோம் என குறிப்பிட்டுள்ளார். (ஐ)

# மீன் பிடிக்க சென்ற நபர் குளத்தில் வீழ்ந்து உயிரிழப்பு!

*செவனகல பகுதியில் உள்ள ஹபுருகலை போதிராஜா குளத்தில் வீழ்ந்து ஒருவர் உயிரிழந்துள்ளார். செவனகல மஹகமபகுதியைச் சேர்ந்த 42 வயதுடைய நபரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.*

*குறித்த நபர் மற்றொரு நபருடன் குளத்தில் மீன்பிடித்துக் கொண்டிருந்த வேளையில் ஒரு குழியில் விழுந்து நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளதாக விசாரணைகளில் தெரியவந்துள்ளது.*

*உயிரிழந்தவரின் சடலம் எம்பிலிப்பிட்டிய வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை செவனகல பொலிஸார் முன்னெடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.*

# அநுர அரசாங்கத்தை சாடிய மொட்டு கட்சி!

வடக்கில் வாக்குகளை பெற்றுக் கொள்வதற்காக இனவாதத்தை விதைத்ததன் பிரதிபலனையே ஜே.வி.பி தற்போது அறுவடை செய்கிறது என மொட்டுக் கட்சியின் செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்துள்ளார்.

இன்று கட்சி தலைமையகத்தில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தொடர்ந்துரையாற்றிய அவர், மகிந்த ராஜபக்ச பிரிவினைவாத போரை முடிவுக்கு கொண்டு வந்து வடக்கு, கிழக்கு மக்களுக்கு சமாதானத்தை ஏற்படுத்தினார். ஆனால் ஜே.வி.பி மீண்டும் வாக்குகளுக்காக பிரினை வாதத்தை விதைத்தனர். 'வினை விதைத்தவன் வினை அறுப்பான்' என்பதற்கேற்ப அதை இன்று அரசாங்கம் வடக்கில் அறுவடை செய்கிறது. ஒரு நாடு என்ற வகையில் நாம் இதை பாரதூரமாக பார்க்க வேண்டியுள்ளது. மேலும் தேசிய பாதுகாப்பு தொடர்பில் கவனம் செலுத்த வேண்டும். முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் செல்வாக்கை குழைக்க ஜே.வி.பி எவ்வளவு தான் பொய் கூறினாலும் மக்கள் ஏற்கொள்ள மாட்டார்கள்.

நாட்டில் முப்பது வருட யுத்தத்தை முடிவுறுத்தி, பாரிய அபிவிருத்தியை செய்த மகிந்தவின் நாமத்தை பொய்களால் மறைக்க முடியாது."என கூறியுள்ளார். (ஐ)

## வீதியில் கிடந்த பொதியில் இருந்து மீட்கப்பட்ட துப்பாக்கிகள் போலியானவை!

கடுவெல, கொரதொட, துன்ஹதஹேன பகுதியில் உள்ள வீதி ஒன்றில் இருந்து மீட்கப்பட்ட துப்பாக்கிகள் போலியானவை என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கடுவெல, கொரதொட, துன்ஹதஹேன பகுதியில் உள்ள வீதி ஒன்றில் இருந்து இன்று (18) மூன்று வு-56 துப்பாக்கிகள், 5 கைத்துப்பாக்கிகள் மற்றும் வு-56 மகசின் ஒன்றும் கண்டுபிடிக்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

வீதியில் கிடந்த பொதி ஒன்றை சோதனையிட்ட போது இந்த துப்பாக்கிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

பின்னர் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் போது குறித்த துப்பாக்கிகள் போலியானவை என உறுதிப்படுத்தப்பட்டுள்ள நிலையில் வு-56 மகசின் போலியானது அல்ல என தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பிலான மேலதிக விசாரணைகளை நவகமுவ பொலிஸார் முன்னெடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது







இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 18.08.2025 வெளியிடப்பெற்றது.